1972 டிசம்பர் 2]

திருமதி த. ந. அனந்தநாயகி : நிபுணர்களை எப்படி தேர்ந்தெடுத்தீர்கள் ? என்னென்ன முறைகள் கையாளப்பட்டன ? நான்-அபிஷியல்ஸைப் போட்டிருக்கிறீர்களா அல்லது அதிகாரிகளைப் போட்டிருக்கிறீர்களா என்பதை விளக்க முன்வருவார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : முழு விவரங்களுக்கு தனிக் கேள்வி கேட்டால் கொடுக்கப்படும். நான்-அபிஷியல்ஸ்தான் இருக்கிறார்கள்.

Books for Tamil Medium Courses

* 4 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that the Government have requested (1) public men and (2) authors to write books for Tamil Medium courses of study;

(*b*) if so, the details thereof ; and

(*c*) the basis on which these men are selected?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) தமிழில் கல்லூரிப் பாடநூல்களை வெளியிடும் பொறுப்பை ஏற்றிருக்கும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், பயிற்சிமொழி தமிழாகவுள்ள வகுப்புகளுக்கானப் புத்தகங்களை எழுதுமாறு நூல் ஆசிரியர்களைக் கேட்டுக் கொண்டுள்ளது.

(இ) பல்வேறு பாடங்களில் புத்தகங்களை எழுதப் பல்வகையான துறைகளிலிருக்கும் ஏறக்குறைய 29 நபர்கள் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர்.

(உ) பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், கல்லூரி முதல்வர்கள் முதலியவர்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துக்கள் பரிந்துரைகள் இவைகளை ஆதாரமாகக்கொண்டு நூல் ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : படிக்கிற மாணவர்களுக்குக் குறித்த காலத்தில் சரியான நூல்கள் கிடைப்பதில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ? அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இதுவரையில் 17 லட்சம் ரூபாய்க்கு மேல் செலவழிக்கப்பட்டு நூல்கள் கொண்டு

வரப்பட்டிருக்கின்றன. 140க்கு மேற்பட்ட நூல்கள் கொண்டுவரப் பட்டிருக்கின்றன. எப்போதைக்கப்போது நூல்கள் பற்றுக்குறை ஏற்படுகிறதோ அவற்றை மறுபடியும் புதுப்பித்து வழங்கும் முயற்சியை அத்துறையினர் மேற்கொண்டு வருகிறார்கள்.

திரு. என். டென்னிஸ் : தேர்ந்தெடுக்கும்போது விளம்பரப் படுத்தி, தேர்ச்சிபெற்றவர்களிடையே விளம்பரம் தந்து அதன் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுவார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கல்லூரிகளுக் கான பாடப் புத்தகங்களைப் பொறுத்தவரையில் யார் யாரிடத்தில் ஒப்படைக்கலாம் என்று துணை வேந்தர் அவர்களிடம் பட்டியல் கேட்டு அவர்கள் யார் யாரைக் குறிப்பிட்டுச் சொல்கிறார்களோ, நல்ல தமிழில் எழுதக் கூடிய வல்லுநர்கள் என்று கருதப்படுகிற, துணைவேந்தர் அவர்கள் யார் யாரை சிபார்சு செய்கிறார்களோ அப்படி சிபார்சு செய்கிறவர்களிடத்தில் பாடப்புத்தகங்கள் அளிக்கப்படுகின்றன.

திரு. கே. எ. வகாப் : இந்தப் பாடப்புத்தகங்களை எழுதுவதற்கு சில அறிஞர்களை ஏற்படுத்துவதாகச் சொல்கிறார்கள். சில ஆரம்பப் பாடப் புத்தகங்களில் மார்க்க விஷயங்கள் எழுதும்போது சில தவறான கருத்துக்கள் புகுத்தப்பட்டு விடுகின்றன. அவற்றை யெல்லாம் ஆராய்ச்சி செய்து அப்படிப்பட்ட தவறான கருத்துக்கள் ஏற்படாத விதத்தில் குறிப்பாக இஸ்லாமிய மதம் பற்றி எழுதும்போது அது சம்பந்தமாக பாண்டித்தியம் உள்ள வர்களை வைத்து எழுதுவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அந்தமாதிரி குறைபாடுகள் ஏதாவது இருந்தால் அது என் கவனத்திற்குக் கொண்டுவரப்படுமானால் அத்துறையினால் ஆராயப்படும்.

Hindi Pandits

* 5 *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the services of the fully qualified Hindi Pandits appointed under rule 10 (*a*) (1). but who are given protection under G.O. Ms. No. 477, Education, dated 6th April 1968, have been terminated ;